මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

LAE\2023\45

2023.03.16

**2023.03.16ஆம் தேதி கூடிய தேர்தல் ஆணைக்குழு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்களை மேற்கொண்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.**

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8(4) ஆம் உட்பிரிவிற்கு அமைய, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் கணக்காய்வு செய்யப்பட்ட கட்சியின் கணக்கு வெளிப்படுத்துகையை தேர்தல் ஆணைக்குழுவுக்குக் கையளித்தல் வேண்டும். ஆயினும் 2021 ஆம் ஆண்டிற்காக கையளிக்கப்பட வேண்டிய கணக்கு வெளிப்படுத்துகைகளை இதுவரை கையளிக்காத அரசியல் கட்சிகளுக்கு அவற்றைக் கையளிக்குமாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இன்று (2023.03.16) வரை அவற்றைக் கையளிக்காத அரசியல் கட்சிகளுக்கு இன்று முதல் 14 நாட்களுக்குள் 2021 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு வெளிப்படுத்துகைகளைக் கையளிக்குமாறு பதிவுத் தபால் மூலம் அறிவிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்ததோடு, அக்கட்டளைக்கமைய செயலாற்றத் தவறுகின்ற அரசியல் கட்சிகள் தொடர்பாக குறித்த சட்டத்தின் 9(3) ஆம் உட்பிரிவுக்கமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக அங்கீகரிக்கப்படுவதற்கு அக்கட்சிகளுக்குள்ள உரித்துரிமையை முடிறுத்தல்.

2023 ஆம் ஆண்டின் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடனான கலந்துரையாடலொன்று 2023.03.23 ஆம் தேதி முற்பகல் 10.00 மணிக்கு தேர்தல் ஆணைக்குழுவில் நடாத்தப்படுதல்.

ஊடகங்களின் ஊடாக பிரபல்யப்படுத்தப்பட வேண்டுமெனக் கருதப்படுகின்ற, தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் மற்றும் தகவல்கள் தொடர்பாக வாராந்தம் அல்லது தேவைப்பாட்டுக்கு அமைய அதற்கு முன்னரேனும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் கையொப்பத்தில் அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் ஊடக அறிவித்தலாக வெளியிடுவதை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதற்குப் புறம்பாக வேறு தரப்பினரிடமிருந்து உத்தியோகபூர்வமற்ற அறிவித்தல்கள் அல்லது தகவல்களைப் பெற்றுக் கொண்டு பகிரங்கப்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ளுமாறு அனைத்து ஊடகங்களிடமும் கோரப்படுவதோடு, அத்தகைய தவறான அறிவித்தல்கள் அல்லது தகவல்கள் தொடர்பாக ஆணைக்குழு எவ்வித பொறுப்பையும் ஏற்காது என்பதை அறிவித்தல்.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.